இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 174 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 21 – ஞாயிற்றுக்கிழமை 04 பிப்ரவரி 2024 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 174 : Thiruvalluvar Year - 2055 - Thai 21 - Sunday 04 February 2024 - Madurai 8 Pages ₹ 5.00






திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவுநாளையொட்டி, ஸ்பெயின் நாட்டில் அவரது திருவுருவப் படத்திற்கு நேற்று (03.02.2024), மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் ஆர்.உமாநாத் ஐ.ஏ.எஸ். ஆகியோர் உள்ளனர்.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பினை ஏற்று அலைகடலெனத் திரண்டனர்!

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தலைமையில் கழக முன்னணியினர் பங்கேற்பு!

**சென்னை, பிப்.4-**

**பேரறிஞர் பெருந்தகை – ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனும் நமது மாபெரும் ஜனநாயகப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த பெருமகன் – அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் நேற்று! இந்நாளில், கழகத்தின் சார்பில், மாபெரும் அமைதிப் பேரணி, அறிஞர் அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெற்றது.**

**கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையிலும் – பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இம்மாபெரும் அமைதிப் பேரணியில், கழக முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், கழக நிர்வாகிகள், முன்னணியினர், அடலேறுகள் ஆயிரக் கணக்கில் பங்கேற்றனர்.**

**அண்ணா நினைவிடத்தில் பேரணி நிறைவுற்றது. அங்கு அரசின் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கழக முன்னணியினர் மலர் தூவி வணங்கினார்கள்.**

அதன் விவரம் வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் – உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் – தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் – ‘கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு’ எனும் மகத்தான தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் – “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும் படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் – “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் – சுயமரியாதைச் சுடரொளி – சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் – எழுத்து வேந்தர் – தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர்-பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் நேற்று!

இந்நாளையொட்டி – கழகத்தின் சார்பில் மாபெரும் அமைதிப் பேரணி, நேற்று காலை 8.00 மணி அளவில் திருவல்லிக் கேணி – வாலாஜா சாலையில் உள்ள ‘அரசு விருந்தினர் மாளிகை’ அருகில் தொடங்கி, அண்ணா நினைவிடத்தில் நிறைவுற்றது.



பேரறிஞர் பெருந்தகை – ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனும் நமது மாபெரும் ஜனநாயகப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த பெருமகன் – அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் நேற்று! இந்நாளில், கழகத்தின் சார்பில், மாபெரும் அமைதிப் பேரணி, அறிஞர் அண்ணா நினைவிடம் நோக்கி நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையிலும் – பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இம்மாபெரும் அமைதிப் பேரணியில், கழக முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், கழக நிர்வாகிகள், முன்னணியினர், அடலேறுகள் ஆயிரக்கணக்கில் பங்கேற்றனர். அண்ணா நினைவிடத்தில் பேரணி நிறைவுற்றது. அங்கு அரசின் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட கழக முன்னணியினர் மலர் தூவி வணங்கினார்கள்.

**கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு முன்னிலை!**

கழகத்தின் இம்மாபெரும் அமைதிப் பேரணிக்கு கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகித்தார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. முன்னிலை வகித்தார்.

இம்மாபெரும் அமைதிப் பேரணியில் – தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு, த.இளைய அருணா, மயிலை த.வேலு மற்றும் முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் இந்நாள் – நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற இந்நாள் – முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அனைத்து கழக நிர்வாகிகளும், செயல் வீரர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு போற்றி ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டார்கள்.